சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 17–ம் நாள் திங்கட்கிழமை

<u>அசல் வழக்கு எண். 98/2021</u>

<u>CNR No.TNTH050002102020</u>

K. கணேஷ் .... வாதி

/எதிர்/

1. ரவி

2. வனிதா ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 30.07.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.S.முத்துக்குமரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

வாதிக்கு பிரதிவாதிகள் பிராது தொகையான ரூ.8,84,000/–மும் அசல் தொகை ரூ.8,00,000/–க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை மாதம் ஒன்றுக்கு 18% வட்டியும் செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>

வாதியிடம், பிரதிவாதிகள் அவர்களது அவசர நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், சில்லரைக்கடன்களை தீர்ப்பதற்காகவும், வேண்டி கடந்த 24.08.2019 ம் தேதியன்று ரூ.8,00,000/– கடன் பெற்று கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக மாதம் 1 க்கு ரூ.100/–க்கு, ரூ.1.00 வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும் அசலும் வாதி வேண்டும் போது வாதியிடமாவது அல்லது வாதியின் உத்திரவு பெற்றவர்களிடமாவது ரொக்கம் செலுத்தி வைப்பதாக ஒப்புக்கொண்டு வாதிக்கு பிரதிவாதிகள், வாதியின் வீட்டில் வைத்து புரோ நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், அதன் பின்னர் அசல் மற்றும் வட்டித்தொகையை செலுத்தக்கோரி வாதி நேரில் சென்றும், ஆட்கள் மூலம் துயர்ந்தும்,

கேட்டதில் பிரதிவாதிகள் யாதொரு தொகையையும் செலுத்தாமல் செலுத்தி விடுவதாகவே கூறி வீண் காலம் கடத்தி வந்தார் என்றும், எனவே, வாதியால் பிராதில் கண்ட தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் திரும்பப்பெற வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பு விசாரணை முடிவுற்று பிரதிவாதிகள் தரப்பில் அவர்களை அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

4) <u>பிரச்சனை மற்றும் அதற்கான தீர்வு</u>

வாதி கோரியுள்ள பரிகாரம் செலவுத்தொகையுடன் கிடைக்கக்கூடியதா?

5) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் வாதி கணேஷ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 24.08.2019 ம் தேதியில் வாதிக்கு பிரதிவாதிகள் ரூ.8,00,000/- எழுதிகொடுத்துள்ள பிராமிசரி நோட்டு வா.சா.ஆ, 1 ஆக, குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதி தரப்பில் புரோநோட்டில் சாட்சி கையெழுத்து போட்ட திருமலை ராஜ் மற்றும் வெங்கடேசன் வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

6) மேலும், மேற்படி வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான வாய்மொழி சாட்சியம் மற்றும் வாசாஆ1 வது ஆவணத்தை பரிசீலனை செய்யும்போது பிரதிவாதிகள் கடந்த 24.08.2019 ம் தேதியில் அவரது அவசர நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், சில்லரைக்கடன்களை தீர்ப்பதற்காகவும், வாதியிடம் ரூ.8,00,000/-ஐ கடனாக ரொக்கம் பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ள விபரம் மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது.

7) ஆனால், வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சியங்களை விசாரித்து அவர்கள் மூலம் வா.சா.ஆ.1 வது ஆவணத்தை தாக்கல் செய்து வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்துள்ள நிலையில், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் வழக்கை (Rebuttal) மறுத்தளித்து வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை என்பது தெரிய வருகிறது.

8) எனவே, வாதி தரப்பு வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவண சாட்சியம் மூலம் பிரதிவாதிகள் கடந்த 24.08.2019 ல் ரூ.8,00,000/– கடன் பெற்று கொண்டு அதற்கு ஆதாரவாக வா.சா.ஆ. 1 புரோநோட்டு எழுதி கொடுத்துள்ள விவரம் வாதி தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் அவரது வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் வாதி கோரியுள்ள பரிகாரம் செலவுத்தொகையுடன் கிடைக்கத்தக்கது என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9) மேலும், வாதி பிராதில் ரூ.100–க்கு ரூ.1 வீதம் 18 சதவீத வருட வட்டி கோரியிருந்தாலும் வழக்கின் தன்மை மற்றும் பிரதிவாதிகள்யுடைய சமூக பொருளாதார சூழ்நிலை ஆகியவற்றை பரிசீலனை செய்யும்போது, வாதிக்கு 9 சதவீத வட்டி வழங்குவதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10) இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதிகள் வாதிக்கு ரூ.8,84,000/–மும் அசல் தொகை ரூ.8,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 17.08.2026 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வா.சா.1 –கணேஷ்
வா.சா.2–திருமலை ராஜ்
வா.சா.3–வெங்கடேஷன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 24.08.2019 | வாதிக்கு பிரதிவாதி ரூ.8,00,000/– எழுதிகொடுத்துள்ள புரோநோட்டு | அசல் |

பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்

– இல்லை –

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 17–ம் நாள் திங்கட்கிழமை

அசல் வழக்கு எண். 98/2021

CNR No.TNTH050002102020

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம், இராஜாஜி தெரு, கதவு எண்.198, என்ற முகவரியில் வசித்து வரும், கோதண்டராமன் செட்டியார் அவர்களின் மகன்இந்து சுமார் 45 வயதுள்ள K. கணேஷ்.

.... வாதி

/எதிர்/

1. தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம், வார்டு 12, திருவள்ளுவர் தெரு, கதவு எண். 4–2–77/12 என்ற முகவரியில் வசித்து வரும் சந்திரசேகரன் அவர்களின் மகன் இந்து சுமார் 45 வயதுள்ள ரவி.

2. தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம், வார்டு 12, திருவள்ளுவர் தெரு, கதவு எண். 4–2–77/12 என்ற முகவரியில் வசித்து வரும் ரவி அவர்களின் மனைவி இந்து சுமார் 45 வயதுள்ள, வனிதா.

... பிரதிவாதிகள்

வாதிக்கு பிரதிவாதிகள் பிராது தொகையான ரூ.8,84,000/–மும் அசல் தொகை ரூ.8,00,000/–க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை மாதம் ஒன்றுக்கு 18% வட்டியும் செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு எழுந்த நாள் | - | 08.06.2020 |
| வழக்குமூலம் எழுந்த நாள் | - | 24.08.2019 ம் தேதியில் மேலக்கூடலூர் டவுனில் உற்பத்தி. |
| தாவா மதிப்பு | - | ரூ.8,84,000 /– |
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | - | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 22–ன் படி ரூ.26,520/– செலுத்தப்பட்டுள்ளது, |

இவ்வழக்கு 30.07.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.S.முத்துக்குமரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்பாணை

| | |
|---|---|
| 1 | இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. |
| 2 | பிரதிவாதிகள் வாதிக்கு ரூ.8,84,000/–(Rounded off) மும் அசல் தொகை ரூ.8,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 3 | இவ்வழக்கின் செலவுத்தொகை ரூ.32,195/-ஐ வாதிக்கு பிரதிவாதிகள்கள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |

## செலவுத்தொகைப்பட்டியல்

| | | | வாதி தரப்பில் | பிரதிவாதிகள்கள் தரப்பில் |
|---|---|---|---|---|
| 1 | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | : | 26520.00 | |
| 2 | வக்காலத்து நாமாவுக்கு | : | 10.00 | |
| 3 | பிறாசஸ் பிஸ் | : | 20.00 | |
| 4 | வழக்கறிஞர் கட்டணம் (ஜீனியர்) | : | 5475.00 | செலவுத்தொகைப்பட்டில் தாக்கல் செய்யப்படவில்லை |
| 5 | பிளிடிங் சார்ஜ் | : | 100.00 | |
| 6 | கட்டளை சேர்ப்பிப்பதற்கு | : | 70.00 | |
| | மொத்தம் | | 32195.00 | |

2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 17 –ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது,

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

OS.98/2021
தீர்ப்பாணை
நாள்.17.08.2026